بِسْمِ اللَّهِ الرَّحْمَٰنِ الرَّحِيمِ

# கமேனியின் மரணமும் உணர்ச்சிவசப்படும் அழைப்பாளர்களும்

# ஷரீஅத்தின் நிலைப்பாடு என்ன?

முஹம்மத் அஸ்லம் மதனி (حفظه الله)

@islamtamilinfo

www.islamtamil.com

# பொருளடக்கம்


வரலாற்று அறியாமையும் ராஃபிதாக்களின் துரோகங்களும் ........ 6

முஸ்லிம் ஆட்சியாளர்களை விமர்சிப்பதன் மார்க்கத் தீர்ப்பு .........9

ஸஹாபாக்களின் வழிகாட்டுதலும், கிளர்ச்சியாளர்களின் ஃபித்னாவும் ........................................................................ 11

ஈரானின் வரலாற்றுத் துரோகங்கள் .........................................13

ஈரானை விமர்சித்தால் இஸ்ரேலை ஆதரிப்பதாக அர்த்தம்" என்ற போலி வாதம் ........................................................................14

உலமாக்களின் வழிகாட்டுதலைப் பின்பற்றுதல் .......................... 20

வளைகுடாப் போரின் உண்மையான வரலாறும், தற்காப்பு நடவடிக்கைகளும் ........................................................................ 24

வளைகுடா போரில் ராணுவத் தளங்களுக்கு அனுமதிக்கப்பட்டது குறித்த உண்மை நிலையும் அறிஞர்களின் ஃபத்வாவும் ............ 26

நன்றி கெட்ட விமர்சனங்கள் ................................................ 39


@islamtamilinfo

بسم الله الرحمن الرحيم

அளவற்ற அருளாளனும் நிகரற்ற அன்புடையோனுமான அல்லாஹ்வின் திருப்பெயரால் ஆரம்பம் செய்கிறேன். அகிலங்களின் இறைவனான அல்லாஹ்விற்கே எல்லாப் புகழும். அவனது இறுதித் தூதர் மீதும், அவர்களின் குடும்பத்தார், தோழர்கள் மீதும் ஸலவாத்தும் ஸலாமும் உண்டாவதாக.

இன்றைய சமூகத்தின் மிகப்பெரிய பிரச்சினை என்னவென்றால், எந்தவொரு நிகழ்வையும் அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்கள் காட்டித்தந்த வழிகாட்டுதலின் அடிப்படையில் அணுகாமல், உணர்ச்சிகளின் அடிப்படையில் அணுகுவதாகும்.

இவ்வாறு மார்க்க வரம்புகளை மீறும்போது மார்க்கத்தில் சந்தேகங்களும் குழப்பங்களும் (ஃபித்னாக்களும்) தோன்றுவது தவிர்க்க முடியாததாகி விடுகிறது. இதற்குச் சமீபத்திய உதாரணமாக, ஈரானைச் சேர்ந்த கமேனி கொல்லப்பட்ட நிகழ்வைக் குறிப்பிடலாம்.

இந்தச் செய்தி வெளியானவுடன், சமூக வலைத்தளங்களில் சிலர் அவரைப் புகழ்ந்து பேசுவதையும், முஸ்லிம் ஆட்சியாளர்களை இழிவாகப் பேசி, அவர்களை அமெரிக்க மற்றும் இஸ்ரேலியர்களின் 'கைக்கூலிகள்' என்று வர்ணிப்பதையும் பார்க்க முடிகிறது. இது முற்றிலும் பொறுப்பற்ற, கவாரிஜ்கள் மற்றும் இக்வானிகளின் வழிகெட்ட சிந்தனையின் வெளிப்பாடாகும்.

குழப்பமான காலகட்டங்களில் நாம் எவ்வாறு செயல்பட வேண்டும் என்பதற்கு, இர்பாத் பின் ஸாரியா (ரதியல்லாஹு அன்ஹு) அவர்கள் அறிவிக்கும் பின்வரும் ஹதீஸ் மிகச் சிறந்த வழிகாட்டியாகும்:

அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்கள் கூறினார்கள்:

فَإِنَّهُ مَنْ يَعِشْ مِنْكُمْ بَعْدِي فَسَيَرَى اخْتِلَافًا كَثِيرًا، عَلَيْكُمْ بِسُنَّتِي، وَسُنَّةِ الْخُلَفَاءِ الْمَهْدِيِّينَ الرَّاشِدِينَ، تَمَسَّكُوا بِهَا، وَعَضُّوا عَلَيْهَا بِالنَّوَاجِذِ

உங்களில் எனக்குப் பிறகு உயிர் வாழ்பவர்கள் பல கருத்து வேறுபாடுகளைக் காண்பார்கள். அப்போது என் சுன்னாவையும், நேர்வழிபெற்ற கலீஃபாக்களின் சுன்னாவையும் உறுதியாகப் பற்றிக்கொள்ளுங்கள். அதனை கடவாய் பற்களால் கவ்விக் கொள்ளுங்கள். **(நூல்: அபூதாவூத் 4607).**

நாம் மீண்டும் நினைவூட்டுகிறோம், இன்றைய உலக நிகழ்வுகள் நமது கொள்கைப் பாடத்தோடு ஆழமாகப் பிணைந்துள்ளன. இஸ்லாமிய நிலைப்பாடு என்பது, இரண்டு எதிரிகள் தங்களுக்குள் மோதிக்கொள்ளும் போது, அதில் ஒரு எதிரியை ஆதரிப்பதோ அல்லது அவர்கள் மீது அனுதாபம் கொள்வதோ அல்ல. உலக முஸ்லிம்களின் நிலைப்பாடு என்பது எப்போதுமே சத்தியம் எங்கு இருக்கிறதோ, அந்தச் சத்தியத்தின் பக்கம் நிற்பதுதான்.

இது குறித்தே அல்லாஹ் திருமறையில் கூறுகிறான்:

۞ يَٰٓأَيُّهَا ٱلَّذِينَ ءَامَنُواْ كُونُواْ قَوَّٰمِينَ بِٱلْقِسْطِ شُهَدَآءَ لِلَّهِ وَلَوْ عَلَىٰٓ أَنفُسِكُمْ أَوِ ٱلْوَٰلِدَيْنِ وَٱلْأَقْرَبِينَ ۚ

முஃமீன்களே! (நீங்கள் சாட்சி கூறினால், அது உங்களுக்கோ, அல்லது உங்கள் பெற்றோருக்கோ, அல்லது நெருங்கிய உறவினருக்கோ விரோதமாக இருந்த போதிலும், நீதியை நிலைநிறுத்தியவர்களாக அல்லாஹ்வுக்காகவே சாட்சி கூறுபவர்களாக இருங்கள் (**அல்குர்ஆன் 4:135**).

ஆகவே, உணர்ச்சிகளுக்கு அடிமைப்படாமல், அல்லாஹ் மற்றும் அவனது தூதர் ﷺ அவர்களின் கட்டளைகளுக்கு மட்டுமே நாம் முழுமையாகக் கட்டுப்பட்டிருக்க வேண்டும்.

## வரலாற்று அறியாமையும் ராஃபிதாக்களின் துரோகங்களும்

ராஃபிதாக்களின் (ஷியாக்களின்) பின்னணி என்ன? குறிப்பாக, இந்தக் கமேனியின் உண்மையான முகம் என்ன? என்பதைப்

பற்றிய குறைந்தபட்ச வரலாற்றுத் தகவல் கூட இல்லாமல், சிலர் தாங்களை மார்க்கம் படித்தவர்களாகக் காட்டிக்கொண்டு பொறுப்பற்ற முறையில் பேசி வருகிறார்கள். கமேனியை முஸ்லிம்களின் அரணாக, மாபெரும் வீரராகச் சித்தரித்து மக்களிடம் அப்பட்டமான பொய்ப் பிரச்சாரம் செய்கிறார்கள். அப்பாவி மக்களைத் தேவையில்லாமல் உணர்ச்சிவசப்படுத்தி, வழிகேட்டின் பக்கம் அழைக்கும் இவர்கள் அல்லாஹ்வை அஞ்சிக் கொள்ள வேண்டும். இதன் பின்னால் உள்ள உண்மைத் தன்மையை அல்லாஹ்வே நன்கறிந்தவன்.

அல்லாஹ்வின் அடியார்களே! சுன்னி முஸ்லிம்களை கொலை செய்ததில் ஈரானின் செயல்பாடுகளும் பங்களிப்புகளும் சாதாரணமானவையல்ல. சிரியா மற்றும் ஈராக் போன்ற நாடுகளின் மக்களுக்கு ஈரானிய ஆட்சியாளர்களின் நாசகாரப் புத்தி மிகத் தெளிவாகத் தெரியும். ஈராக்கிலும் சிரியாவிலும் ஷியா ஆட்சியை நிறுவுவதற்காக, லட்சக்கணக்கான சுன்னத் வல் ஜமாஅத் முஸ்லிம்களைக் கொடூரமாகக் கொன்று குவித்ததில் இந்தக் கமேனிக்கு மிகப்பெரிய பங்குண்டு.

இவர்களின் தீவிரவாதம் ஏமன் நாட்டுக்கும் பரவி, அங்குள்ள ஹூதிக்களுக்கு ஆயுதங்களை வழங்கி, அங்கும் சுன்னி முஸ்லிம்களின் ரத்தம் ஓட்டப்பட்டது. எங்குச் சென்றாலும் சைத்தானைப் போல நுழைந்து, குழப்பத்தை ஏற்படுத்தி அஹ்லுஸ் சுன்னத் வல் ஜமாஅத் மக்களைக் கொன்று குவிப்பதே இவர்களின் வரலாறு.

இது குறித்து அல்லாஹ் திருமறையில் எச்சரிக்கிறான்:

ۚ وَيَسْعَوْنَ فِى ٱلْأَرْضِ فَسَادًا ۚ وَٱللَّهُ لَا يُحِبُّ ٱلْمُفْسِدِينَ

"அவர்கள் பூமியில் குழப்பம் செய்யவே முயல்கிறார்கள்; குழப்பம் செய்வோரை அல்லாஹ் நேசிப்பதில்லை."

**(அல்குர்ஆன் 5:64).**

சத்தியத்தின் அடிப்படையில் நடுநிலையோடு உலகச் செய்திகளைப் பார்ப்பவர்களுக்குக் கூட ஈரானின் இந்த நாசகார வேலைகள் மிகத் தெளிவாகப் புரியும்.

Islam Tamil
இஸ்லாம் தமிழ்

## முஸ்லிம் ஆட்சியாளர்களை விமர்சிப்பதன் மார்க்கத் தீர்ப்பு

வரலாற்றின் உண்மைகளைப் புரியாமல், யூடியூப் போன்ற சமூக வலைத்தளங்களில் தோன்றி, மற்ற முஸ்லிம் ஆட்சியாளர்களைக் "கோழைகள்" என்றும், "அமெரிக்காவிற்கு அடிபணிந்தவர்கள்" என்றும் எந்த ஆதாரமுமில்லாமல் வசைபாடுகிறார்கள். எந்த அடிப்படையில் இவர்கள் பேசுகிறார்கள்?

முஸ்லிம் ஆட்சியாளர்களைப் பொதுவெளியில் விமர்சிப்பது மார்க்க அடிப்படையில் முற்றிலும் 'ஹராம்' (தடுக்கப்பட்டது) என்ற அடிப்படையைக் கூட இவர்கள் மறந்துவிட்டார்கள்.

ஆட்சியாளர்களை விமர்சிப்பது குறித்து அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்கள் கடுமையாக எச்சரித்துள்ளார்கள்:

**مَنْ أَهَانَ سُلْطَانَ اللَّهِ فِي الْأَرْضِ، أَهَانَهُ اللَّهُ**

*"யார் பூமியில் அல்லாஹ்வின் ஆட்சியாளரை அவமதிக்கிறாரோ, அவரை அல்லாஹ் அவமதிப்பான்."* **(நூல்: திர்மிதீ 2224)**. இந்த ஹதீஸை அல்–இமாம் அல்பானீ ரஹிமஹுல்லாஹ் “ஹஸன்” (ஏற்றுக்கொள்ளப்பட்டது) என்று தரப்படுத்தியுள்ளார்கள்.

இமாம் அபூ ஹனீஃபா, இமாம் ஷாஃபிஈ, இமாம் மாலிக் மற்றும் இமாம் அஹ்மத் (ரஹிமஹுமுல்லாஹ்) போன்ற அஹ்லுஸ் ஸுன்னாவின் அறிஞர்கள், ஆட்சியாளர்களுக்குக் கட்டுப்படுவது நமது அகீதாவின் (கொள்கையின்) ஒரு அங்கம் என்பதைத் தங்கள் நூல்களில் மிகத் தெளிவாகப் பதிவு செய்துள்ளார்கள்[1].

ஆட்சியாளர்களை விமர்சிப்பது மார்க்கத்தில் கூடாது என்பதை உலமாக்கள் இது குறித்து நூற்றுக்கும் மேற்பட்ட ஹதீஸ்களைத் தொகுத்து வழங்கியுள்ளார்கள். மார்க்கத்தின் இந்த அடிப்படைத் தெளிவு இல்லாமல் பேசுவது பெரும் ஃபித்னாவிற்கே (குழப்பத்திற்கே) வழிவகுக்கும்.

---

[1] *முஸ்லிம்கள் ஆட்சியாளர்களிடம் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டும், அவர்களுக்குக் கட்டுப்படுவதன் அடிப்படை என்ன என்பதைத் தெளிவுபடுத்தும் இக்கட்டுரையை வாசிக்குமாறு வாசகர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.*
https://islamtamil.com/sunnah-to-obey-muslim-rulers/

## ஸஹாபாக்களின் வழிகாட்டுதலும், கிளர்ச்சியாளர்களின் ஃபித்னாவும்

ஆட்சியாளர்களின் விஷயத்தில் முஸ்லிம்கள் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டும் என்பதை ஸஹாபாக்களின் (ரதியல்லாஹு அன்ஹும்) வாழ்க்கை வரலாறு நமக்கு மிகத் தெளிவாகக் காட்டுகிறது. மர்வான் பின் அல்–ஹகம் மற்றும் அப்துல் மலிக் பின் மர்வான் போன்ற ஆட்சியாளர்களின் காலகட்டத்தில் ஏற்பட்ட குழப்பங்களின்போதும், ஸஹாபாக்கள் எத்தகைய நிலைப்பாட்டில் இருந்தார்கள் என்பதை நாம் நேற்றைய வகுப்பில்கூடப் பார்த்தோம். ஒட்டுமொத்த ஸஹாபாக்களும் ஆட்சியாளர்களுக்குக் கட்டுப்பட்டு நடப்பதையே சுன்னாவாகக் கொண்டிருந்தார்கள்.

ஆயுதம் ஏந்திச் சண்டை போடும் ஒரு கவாரிஜ்ஜை (கிளர்ச்சியாளனை) விட, வீட்டில் அமர்ந்துகொண்டே மக்கள் மத்தியில் ஆட்சியாளர்களுக்கு எதிராகக் கிளர்ச்சி எண்ணத்தைத் தூண்டுபவன் மிகவும் மோசமானவன் என்பதை அறிஞர்கள் எச்சரிக்கை செய்கிறார்கள்.

அதுதான் இன்று நடந்துகொண்டிருக்கிறது. மார்க்கத்தைப் பற்றியோ, முஸ்லிம்களின் அரசியல் நிலைப்பாட்டைப் பற்றியோ பேசும் எவராக இருந்தாலும், முழுப் பொறுப்புணர்ச்சியோடு நடந்துகொள்ள வேண்டும்.

கமேனியை நல்லவராகவும், மாபெரும் வீரராகவும் சித்தரித்து இங்குள்ள சிலர் பேசுவதை, ஈரானில் உள்ள முஸ்லிம்கள் கூட ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். உடனே, "அவர் அமெரிக்காவையும் இஸ்ரேலையும் எதிர்த்தார் அல்லவா?" என்று இவர்கள் கேட்பார்கள். இஸ்ரேல் ஒரு நாசகார, அநியாயக்கார தேசம் என்பதில் எந்த முஸ்லிமாவது மாறுபடுகிறார்களா? எந்த இஸ்லாமிய நாடாவது இதை மறுக்கிறதா? இஸ்ரேலை எதிர்க்கிறார்கள் என்ற ஒரே காரணத்திற்காக, அஹ்லுஸ் ஸுன்னாவை அழிப்பவர்களை நாம் ஆதரிக்க முடியாது.

குறிப்பாக, சவுதி அரேபியா போன்ற நாடுகளை விமர்சிக்க வேண்டும் என்றால், எதையும் யோசிக்காமல் அவதூறுகளை அள்ளி வீசிவிடுகிறார்கள். அல்லாஹ்வை அஞ்சிக்கொள்ளுங்கள்! இது ஏன் இவ்வளவு பெரிய

பிரச்சனையாக மாறுகிறது என்றால், மார்க்கம் என்ன சொல்கிறது என்பதைத் திரும்பிப் பார்க்க இவர்கள் தவறிவிட்டார்கள்.

## ஈரானின் வரலாற்றுத் துரோகங்கள்

முஸ்லிம் ஆட்சியாளர்களைக் "கோழைகள்" என்று விமர்சிப்பவர்கள், வரலாற்றுப் பக்கங்களைத் திருப்பிப் பார்க்க வேண்டும். முஸ்லிம்களைக் கொன்று குவித்ததில் ஈரானுக்கு இருக்கும் பங்கு என்ன? சிரியாவில் பஷர் அல்–அஸாத்தின் கொடூரமான ஆட்சி இத்தனை காலங்கள் நிலைநிறுத்தப்பட்டதற்குக் காரணம் யார்? அந்த அடக்குமுறை ஆட்சியைக் காப்பாற்றியது இந்த ஈரான் அல்லவா! சிரியா நாட்டு முஸ்லிம்களுக்காக நாம் துஆ செய்தோமே, அவர்களின் ரத்தம் சிந்தப்படுவதற்குக் காரணமானவர்களையா இன்று நீங்கள் போற்றுகிறீர்கள்?

அன்னை ஆயிஷா (ரதியல்லாஹு அன்ஹா) அவர்களை விபச்சாரி என்று பழிசுமத்தும் வக்கிரமான கொள்கையின்

அடிப்படையில் கட்டமைக்கப்பட்டவர்களா உங்களுக்குத் தியாகிகளாகத் தெரிகிறார்கள்?

அல்லாஹ் திருமறையில் கூறுகிறான்:

إِنَّ ٱلَّذِينَ يَرْمُونَ ٱلْمُحْصَنَٰتِ ٱلْغَٰفِلَٰتِ ٱلْمُؤْمِنَٰتِ لُعِنُوا۟ فِى ٱلدُّنْيَا وَٱلْـَٔاخِرَةِ وَلَهُمْ عَذَابٌ عَظِيمٌ

"நிச்சயமாக எவர்கள் முஃமினான, (பாவத்தை அறியாத) கற்புடைய பத்தினிப் பெண்கள் மீது அவதூறு கூறுகிறார்களோ, அவர்கள் இம்மையிலும் மறுமையிலும் சபிக்கப்பட்டவர்கள் இன்னும், அவர்களுக்கு கடுமையான வேதனை உண்டு" (அல்குர்ஆன் 24:23).

## ஈரானை விமர்சித்தால் இஸ்ரேலை ஆதரிப்பதாக அர்த்தம்" என்ற போலி வாதம்

அவர்கள் வைக்கும் அடுத்த போலியான வாதம்: "ஈரானையோ அல்லது ஹிஸ்புல்லாஹ்வையோ விமர்சிப்பவர்கள் இஸ்ரேலுக்கும் அமெரிக்காவிற்கும் ஏஜெண்டுகள்."

இது மக்களை உணர்ச்சிவசப்படுத்தி ஏமாற்றும் தந்திரமாகும். அஹ்லுஸ் சுன்னா வல் ஜமாஅத் இரண்டு வழிகேடுகளையும் ஒரே நேரத்தில் எதிர்க்கின்றது. இஸ்ரேல் என்பது அப்பட்டமான எதிரி. ஈரான் மற்றும் ஹிஸ்புல்லாஹ் என்பவர்கள் இஸ்லாத்தின் பெயரால் உள்ளே நுழைந்து சுன்னி முஸ்லிம்களை அழிக்கும் கொடிய பாவிகள். சிரியாவிலும் ஈராக்கிலும் இலட்சக்கணக்கான சுன்னி முஸ்லிம்களைத் துள்ளத்துடிக்க கொன்று குவித்தவர்கள் ஈரானின் ஆதரவு பெற்ற ஹிஸ்புல்லாஹ் மற்றும் சியா மிலிஷியாக்கள் ஆவர். இவர்களின் குற்றங்களை அம்பலப்படுத்துவது எப்படி இஸ்ரேலை ஆதரிப்பதாகும்? இருவருமே முஸ்லிம்களின் இரத்தத்தைக் குடிப்பவர்கள்தான். ஒரு அநீதியை எதிர்க்க, மார்க்கத்தின் அடிப்படைகளை அழிக்கும் இன்னொரு அநீதியுடன் கைகோர்ப்பது எவ்விதத்தில் சத்தியத்தின் பக்கம் நிற்பதாகும்?

**"முஸ்லிம் நாடுகள் காஸாவைக் கைவிட்டுவிட்டன" என்ற அப்பட்டமான பொய்**

"வளைகுடா நாடுகள் பாலஸ்தீனத்திற்குத் துரோகம் செய்துவிட்டன, ஈரான் மட்டுமே ஆயுதம் கொடுக்கிறது" என்பது இவர்கள் பரப்பும் மிகப்பெரிய அவதூறு.

ஈரான் தனது அரசியல் லாபத்திற்காகப் பாலஸ்தீனப் போராளிகளுக்கு ஆயுதங்களை மட்டுமே கொடுக்கிறது. அந்த ஆயுதங்களால் ஏற்படும் விளைவுகளைச் சந்திக்க நேரும்போது, பாலஸ்தீன மக்களைக் கைவிட்டு விடுகிறது. ஆனால், காஸா மக்களுக்கு உணவும், உறைவிடமும், மருத்துவமும் கொடுத்து அவர்களின் உயிரைக் காப்பாற்றுவது வளைகுடா முஸ்லிம் நாடுகள் மட்டுமே. இதோ அதன் அதிகாரப்பூர்வ புள்ளிவிவரங்கள்:

ஐக்கிய நாடுகள் சபையின் 'நிதி கண்காணிப்பு தளத்தின்' (FTS) தரவுகளின்படி, மனிதாபிமான உதவிகள் வழங்குவதில் 2025 ஆம் ஆண்டில் உலக அளவில் சவூதி அரேபியா இரண்டாவது இடத்தையும், அரபு உலகில் முதலிடத்தையும் பிடித்துள்ளது. காஸா போரின் போது மட்டும் 'மன்னர் சல்மான் நிவாரண மையம்' மூலமாக 7,600 டன்களுக்கும் அதிகமான நிவாரணப்

பொருட்களை சவூதி வழங்கியுள்ளது. இதற்காக 69 சரக்கு விமானங்களும் 8 கப்பல்களும் அனுப்பப்பட்டுள்ளன. மேலும் UNRWA–விற்கு 55 மில்லியன் டாலர்களும், உலக சுகாதார அமைப்பிற்கு 10 மில்லியன் டாலர்களும், செஞ்சிலுவைச் சங்கத்திற்கு 10 மில்லியன் டாலர்களும் நிதியுதவியாக வழங்கப்பட்டுள்ளன[2].

ஐக்கிய அரபு அமீரகம் காஸா மக்களின் மறுவாழ்விற்காக 1.2 பில்லியன் டாலர்கள் கூடுதல் நிதியுதவியை அறிவித்துள்ளது[3].

300 நாட்களுக்குள் 30–க்கும் மேற்பட்ட தொண்டு நிறுவனங்கள் இணைந்து 18 மில்லியன் டாலர்களை (1 கோடியே 80 லட்சம் டாலர்கள்) குவைத் வழங்கியுள்ளது. 23 நிவாரண விமானங்கள் மூலம் 550 டன் அத்தியாவசியப் பொருட்களும், 27 ஆம்புலன்ஸ்களும், 2.5 மில்லியன் லிட்டர் சுத்தமான குடிநீரும் காஸாவிற்குக் கொடுக்கப்பட்டுள்ளன. கத்தார் சேரிட்டி தனது

---

[2] https://english.wafa.ps/Pages/Details/165873
[3] https://english.aawsat.com/gulf/5206531-saudi-arabia-delivers-new-batch-food-aid-gaza-strip.

உதவிகளை 142 மில்லியன் டாலர்களாக உயர்த்தியுள்ளது. அரசியல் லாபத்திற்காக ஈரானின் வெற்று முழக்கங்களைக் கொண்டாடி, உண்மையாகக் களத்தில் கோடிக்கணக்கான டாலர்களைச் செலவழித்து பாலஸ்தீன மக்களின் உயிரைக் காக்கும் முஸ்லிம் ஆட்சியாளர்களைத் தூற்றுவது மிக மோசமான செயலாகும். ஆட்சியாளர்களைப் பொதுவெளியில் தூற்றுவது இஸ்லாமிய மார்க்கத்தில் ஹராமாக்கப்பட்ட செயலாகும். உணர்ச்சிகளைத் தூண்டிவிட்டு, தூய அகீதாவைக் குழிதோண்டிப் புதைக்கும் இந்த இக்வானிய சிந்தனைகளை முஸ்லிம் சமுதாயம் முழுமையாகப் புறக்கணிக்க வேண்டும்.

## பொய்பிரச்சாரம்

சத்தியத்தை எடுத்துரைக்கும் போதெல்லாம், தங்களின் வாதங்களுக்கு மார்க்க அடிப்படையில் நேருக்கு நேர் பதிலளிக்க முடியாத இந்த கவாரிஜ் மற்றும் இக்வானிஸ சிந்தனையாளர்கள் வைக்கும் அடுத்த குற்றச்சாட்டு என்ன தெரியுமா? "இவர்கள் சவுதியிடம் பணம் வாங்கிக்கொண்டு ஆட்சியாளர்களுக்கு ஆதரவாகப் பேசுகிறார்கள்" என்பதுதான்.

இந்த அபாண்டமான பொய்யை இவர்களால் நிரூபிக்க முடியுமா? இவ்வாறு அஹ்லுஸ் ஸுன்னாவின் நிலைப்பாட்டைப் பேசுபவர்களுக்குச் சவுதியிலிருந்து பணம் வருகிறது என்பதை நிரூபிக்க இவர்களிடம் அணுவளவாவது ஆதாரம் இருக்கிறதா? இதற்கான ஆதாரத்தை முன்வைக்க முடியுமா என்று இவர்களுக்கு நாம் பகிரங்கமாகவே சவால் விடுகிறோம்.

மார்க்கத்தின் அடிப்படையையும், உத்தம ஸஹாபாக்களின் (ரதியல்லாஹு அன்ஹும்) கொள்கையையும் மக்களிடம் எடுத்துச் சொல்வதற்கு எங்களுக்கு எந்த நாட்டுப் பணமும் தேவையில்லை. அல்லாஹ்வுக்காகவே இந்தச் சத்தியத்தை நாம் பேசுகிறோம். மறுமையில் அல்லாஹ்வுக்கு முன்னால் ஒவ்வோர் வார்த்தைக்கும் பதில் சொல்லியாக வேண்டும் என்ற இறையச்சம் (துக்வா) இவர்களுக்குச் சிறிதளவாவது இருந்தால், இப்படிப்பட்ட கீழ்த்தரமான அவதூறுகளைச் சுமத்த மாட்டார்கள். மார்க்க அடிப்படையில் சத்தியத்தை எதிர்கொள்ளத் திராணியில்லாதவர்களின் கோழைத்தனமான ஆயுதமே இந்த அவதூறு!

அல்லாஹ் தன் திருமறையில் கூறுகிறான்:

قُلْ هَاتُوا۟ بُرْهَـٰنَكُمْ إِن كُنتُمْ صَـٰدِقِينَ

நீங்கள் உண்மையாளர்களாக இருந்தால் உங்கள் ஆதாரத்தைக் கொண்டு வாருங்கள்.

(அல் குர்ஆன் 2:111)

## உலமாக்களின் வழிகாட்டுதலைப் பின்பற்றுதல்

அல்லாஹ்வின் அடியார்களே! நடுநிலையாக இருங்கள். எந்தவொரு குழப்பமான சூழ்நிலையிலும் சத்தியம் என்னவென்பதை அறிந்து கொள்ள, ரப்பானிய்யான (இறையச்சமுள்ள) உலமாக்கள் என்ன முடிவெடுக்கிறார்கள் என்பதைப் பாருங்கள். சத்தியத்தைப் படித்து விளங்கிய அந்த உலமாக்களின் பின்னால் நில்லுங்கள்.

ஒவ்வொரு தனிமனிதனும் உலகத்தில் நடக்கும் எல்லாவற்றுக்கும் குரல் கொடுக்க வேண்டும், எல்லாவற்றுக்கும் கருத்துத் தெரிவிக்க வேண்டும் என்பது மார்க்கக் கடமையல்ல.

நடக்கும் எல்லா விஷயங்களுக்கும் நாமே ஒரு முடிவெடுத்து, நாமே ஒரு கருத்தைப் பேசிவிட வேண்டும் என்று நினைக்க வேண்டாம். தேவையற்ற உணர்ச்சிவசப்படுதல்களிலிருந்தும், மார்க்கத்திற்கு முரணான சிந்தனைகளிலிருந்தும் விலகியிருப்போம். அல்லாஹ் நம் அனைவரையும் நேர்வழியில் நிலைநிறுத்துவானாக.

وَإِذَا جَآءَهُمْ أَمْرٌ مِّنَ ٱلْأَمْنِ أَوِ ٱلْخَوْفِ أَذَاعُوا۟ بِهِۦ ۖ وَلَوْ رَدُّوهُ إِلَى ٱلرَّسُولِ وَإِلَىٰٓ أُو۟لِى ٱلْأَمْرِ مِنْهُمْ لَعَلِمَهُ ٱلَّذِينَ يَسْتَنۢبِطُونَهُۥ مِنْهُمْ ۗ وَلَوْلَا فَضْلُ ٱللَّهِ عَلَيْكُمْ وَرَحْمَتُهُۥ لَٱتَّبَعْتُمُ ٱلشَّيْطَـٰنَ إِلَّا قَلِيلًا

*மேலும், (யுத்த) அமைதியோ, அல்லது பீதியோ பற்றிய யாதொரு செய்தி அவர்களுக்கு வந்துவிட்டால் (உடனே, அதனை (வெளியில் மக்களிடையே) பரப்பி விடுகின்றனர், (அவ்வாறு செய்யாது) அதனை (அல்லாஹ்வுடைய) தூதரிடமும், அவர்களில் (மார்க்க ஞானமுள்ள) அதிகாரமுடையவர்களிடமும் தெரிவித்திருந்தால், அவர்களிலிருந்து அதனை ஆய்ந்து எடுப்பவர்கள் அதனை (நன்கு) அறிந்து கொள்வார்கள், மேலும்*

*(விசுவாசிகளே!) அல்லாஹ்வுடைய பேரருளும், அவனுடைய கிருபையும் உங்கள் மீது இல்லாதிருந்தால், (உங்களில்) குறைவானவர்களைத் தவிர நீங்கள் யாவரும் ஷைத்தானையே பின்பற்றியிருப்பீர்கள்.* (அல்குர்ஆன் 4:83).

அகிலத்தின் ரட்சகனான அல்லாஹ்வின் இந்த மகத்தான வசனத்தை எப்போதாவது நாம் சிந்தித்ததுண்டா?

**உணர்ச்சிகளைத் தூண்டும் போலி அழைப்பாளர்களும், மக்களின் யதார்த்தமும்**

இன்று தம்மை 'அழைப்பாளர்கள்' என்று சொல்லிக் கொண்டு, கவாரிஜ்களின் சிந்தனைகளைப் பரப்பிக் கொண்டிருப்பவர்கள் அல்லாஹ்வை அஞ்சிக் கொள்ள வேண்டும். மார்க்கத்தின் பெயரால் அப்பாவி மக்களின் உணர்ச்சிகளோடு விளையாடுவது ஒரு உண்மையான முஸ்லிமுக்கும், சத்தியத்தை எடுத்துரைக்கும் அழைப்பாளருக்கும் அழகல்ல.

எவர் வேண்டுமானாலும் மேடைகளிலும், சமூக வலைத்தளங்களிலும் உணர்ச்சிவசப்பட்டுப் பேசலாம்; மக்களின்

கோபத்தைத் தூண்டும் விதமாக வார்த்தைகளை வீசலாம். ஆனால், 'அகீதா' (கொள்கை) என்ற ஒரு தெளிவான அடிப்படை நமக்கு இருக்கிறது என்பதை ஒருபோதும் மறந்துவிடக் கூடாது.

கமேனியையோ அல்லது ஈரானின் கொள்கைகளையோ நாம் மார்க்க அடிப்படையில் எதிர்த்தால், உடனே "நீங்கள் இஸ்ரேலை ஆதரிக்கிறீர்களா?" என்று அபத்தமாகக் கேட்கிறார்கள். இஸ்ரேல் ஒரு அநியாயக்காரர்கள் என்பது உலகறிந்த உண்மை. எந்தவொரு உண்மையான முஸ்லிமாவது இஸ்ரேலையும், யூதர்களையும் ஆதரிப்பானா? இது என்ன அநியாயமான வாதம்! இவ்வாறு ஃபித்னா உடைய காலத்தில் குர்ஆன் சுன்னாவிற்கு கட்டுப்பட்டு நாம் அதன்பால் நடக்க வேண்டும் என்று பொறுப்புணர்ச்சியோடு செயல்பட்டு மக்களை வழிநடத்தும் அறிஞர்களை யூதர்களுக்கு குடை தூக்குகிறார்கள் அல்லது யூத கைக்கூலிகளாக இருக்கிறார்கள் என்றெல்லாம் பேசுவது எப்பேர்பட்ட ஒரு அநீதி?!

அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்கள் கூறினார்கள்:

لَيْسَ الْمُؤْمِنُ بِالطَّعَّانِ، وَلاَ اللَّعَّانِ، وَلاَ الْفَاحِشِ، وَلاَ الْبَذِيءِ

*"முஃமின் (இறைநம்பிக்கையாளன்) என்பவன் குறை கூறுபவனாகவோ, சபிப்பவனாகவோ, கெட்ட வார்த்தைகள் பேசுபவனாகவோ, வரம்பு மீறுபவனாகவோ இருக்க மாட்டான்."*

**(நூல்: திர்மிதி 1977).**

## வளைகுடாப் போரின் உண்மையான வரலாறும், தற்காப்பு நடவடிக்கைகளும்

இன்று சமூக வலைத்தளங்களில் சில காணொளிகள் வலம் வருகின்றன. "அரபு ஆட்சியாளர்கள் அமெரிக்காவிற்கு இடமளித்துவிட்டார்கள், அவர்களின் ராணுவத் தளங்களை அமைக்க அனுமதி கொடுத்து இஸ்ரேல் மற்றும் அமெரிக்காவின் கால்களை நக்கினார்கள்" என்றெல்லாம் கீழ்த்தரமான வார்த்தைகளைப் பயன்படுத்துகிறார்கள். இது அஹ்லுஸ் ஸுன்னாவின் பேச்சா? நிச்சயமாக இல்லை! இது அப்பட்டமான

கவாரிஜ்கள் மற்றும் இக்வானிஸ சிந்தனையாளர்களின் நச்சுப் பேச்சாகும்.

"அமெரிக்க ராணுவத் தளங்களுக்கு அரபு நாடுகள் அனுமதி கொடுத்தன" என்று விமர்சிப்பவர்களுக்கு, அதன் பின்னணியில் உள்ள வளைகுடாப் போரின் உண்மையான வரலாறு தெரியுமா? சத்தாம் உசேன் என்ன செய்தார்? அவர் ஏன் குவைத்தை ஆக்கிரமித்தார்?

அமைதியும், பாதுகாப்பும் நிறைந்து, கோடிக்கணக்கான இந்தியர்கள் உட்படப் பல நாட்டு முஸ்லிம்கள் நிம்மதியாகப் பணிபுரிந்து கொண்டிருந்த குவைத் மற்றும் சவுதி அரேபியா போன்ற நாடுகளின் மீது, 'பாத்திசம்' என்ற வழிகெட்ட கொள்கை கொண்ட சத்தாம் உசேன் அத்துமீறி நுழைந்தார். இஸ்லாமிய கிலாஃபத் இல்லாத காலகட்டத்தில், முஸ்லிம் நாடுகள் தனித்தனி சிற்றரசுகளாகப் பிரிந்திருக்கும்போது, அந்தந்த நாட்டு ஆட்சியாளர்களுக்குக் கட்டுப்படுவது மக்களின் கடமையாகும். ஆனால், ஒரு ஆட்சியாளர் எந்த முன்னறிவிப்புமின்றி, அநியாயமாக மற்றொரு முஸ்லிம் நாட்டின்

மீது படையெடுத்துச் சென்று, அவர்களின் எண்ணெய் வளங்களை ஆக்கிரமித்து, அப்பாவி மக்களின் உயிர்களுக்கும் உடமைகளுக்கும் மிகப்பெரிய அச்சுறுத்தலை ஏற்படுத்தினார்.

## வளைகுடா போரில் ராணுவத் தளங்களுக்கு அனுமதிக்கப்பட்டது குறித்த உண்மை நிலையும் அறிஞர்களின் ஃபத்வாவும்

திடீரென ஏற்பட்ட இந்த ஆக்கிரமிப்பை எதிர்கொள்ளவும், தங்களின் நாட்டு மக்களையும், அங்கு வாழும் வெளிநாட்டவர்களையும் காக்கவும் அரபு நாடுகளிடம் அப்போது போதுமான ஆயுத பலம் இருக்கவில்லை. தங்களை தற்காத்துக் கொள்ள வழியில்லாமல் மக்கள் சிக்கித் தவித்த அந்த நெருக்கடியான சூழலில்தான், மார்க்க உலமாக்கள் ஒரு தீர்க்கமான முடிவெடுத்தார்கள்.

ஷய்க் இப்னு பாஸ் (ரஹிமஹுல்லாஹ்) உள்ளிட்ட மாபெரும் இமாம்கள் ஒன்றிணைந்து ஒரு ஃபத்வாவை வழங்கினார்கள். அந்த ஃபத்வா இதோ உங்கள் பார்வைக்கு:

**கேள்வி:** முஸ்லிம்களின் நாடுகளைப் பாதுகாப்பதற்கும் ஈராக் ஆட்சியாளருக்கு எதிராகப் போரிடுவதற்கும் முஸ்லிமல்லாதவர்களின் உதவியைப் பெறுவது குறித்த மூத்த அறிஞர்கள் குழுவின் ஃபத்வாவில் சந்தேகம் கொள்ளும் சிலர்: "அதனை ஆதரிக்கக் கூடிய வலுவான ஆதாரங்கள் இல்லை" என்று கூறுகிறார்கள். இது குறித்து தங்களின் கருத்து என்ன?

பதில்: நாம் இதற்கு முன்னரும் பல கட்டுரைகளிலும் இதனைத் தெளிவுபடுத்தியுள்ளோம். மேலும், மாபெரும் இறைவனான ரப்பு தன்னுடைய மகத்தான வேதத்தில் இதனைத் தெளிவுபடுத்தியுள்ளான் என்பதையும் நாம் விளக்கியுள்ளோம்: சுப்ஹானஹு வதஆலா தன்னுடைய முஃமினான அடியார்களுக்கு, தங்களுக்கு ஹராமாக்கப்பட்டதைச் செய்வதற்கு அவர்கள் நிர்ப்பந்திக்கப்பட்டால் அதனை ஆகுமாக்கியுள்ளான். அல்லாஹ் கூறுவது போல்:

وَقَدْ فَصَّلَ لَكُم مَّا حَرَّمَ عَلَيْكُمْ إِلَّا مَا ٱضْطُرِرْتُمْ إِلَيْهِ

*மேலும், நீங்கள் எதன் பக்கம் நிர்ப்பந்திக்கப்படுகிறீர்களோ அதனைத் தவிர, உங்களுக்கு ஹறாமாக்கப்பட்டதை அவன் உங்களுக்குத் தெளிவாக விவரித்துள்ளான்*

**[அல்–அன்ஆம்: 119].**

மேலும், செத்தவை, இரத்தம், பன்றி இறைச்சி, கழுத்து நெரிக்கப்பட்டுச் செத்தது, அடிபட்டுச் செத்தது மற்றும் பிறவற்றை அவன் ஹறாமாக்கியபோது, வசனத்தின் இறுதியில் கூறினான்:

فَمَنِ ٱضْطُرَّ فِى مَخْمَصَةٍ غَيْرَ مُتَجَانِفٍ لِّإِثْمٍ ۙ فَإِنَّ ٱللَّهَ غَفُورٌ رَّحِيمٌ

"...யாரேனும் பாவத்தின் பக்கம் சாயும் நோக்கமில்லாமல், கடுமையான பசியின் காரணத்தால் நிர்ப்பந்திக்கப்பட்டால், நிச்சயமாக அல்லாஹ் மிக்க மன்னிப்பவன், நிகரற்ற அன்புடையவன்" [**அல்–மாயிதா: 3**].

இதன் பொருள் என்னவென்றால், இந்த நிலையில் அரசு இந்த அக்கிரமக்கார, கொடூரமான இந்த ஆட்சியாளருக்கு எதிராக சில காஃபிரான நாடுகளின் உதவியை நாட வேண்டிய கட்டாயத்திற்குத் தள்ளப்பட்டது; ஏனெனில் அவரது ஆபத்து

மிகப்பெரியது. அவருக்கு வேறு பல உதவியாளர்களும் இருக்கிறார்கள்; ஒருவேளை அவர் வெற்றிபெற்றால் அவர்கள் வெளிப்படுவார்கள், அவர்களின் தீங்கும் பெரிதாகிவிடும். இதனால்தான், இந்த அநியாயக்கார, நாத்திக எதிரியை எதிர்கொள்ளவும், அவனைத் தடுத்து நிறுத்தி அவனது தீங்கைத் தடுக்கவும், அவனது அநியாயத்தை நீக்கவும் உதவக்கூடிய வலிமையான நாடுகள் தேவை என்று சவுதி அரசும் ஏனைய வளைகுடா நாடுகளும் கருதின.

சவுதி அரேபியாவில் உள்ள மூத்த அறிஞர்கள் குழு இதனைச் சிந்தித்து, ஆராய்ந்து, நிலவரத்தை அறிந்தபோது, இது அனுமதிக்கப்பட்ட ஒரு காரியம் என்பதைத் தெளிவுபடுத்தினார்கள். மேலும், தீங்கைத் தடுக்கும் வழிமுறைகளைப் பயன்படுத்துவது கடமையாகும், அதில் தாமதம் செய்வது கூடாது; மாறாக, அத்துமீறல்களைத் தடுத்து அநீதியை ஒழிக்கும் பொருட்டு, இணைவைப்பாளர்களில் ஒரு குழுவினரின் உதவியை நாடி, முஸ்லிம்களுக்கு எதிராக வரும் தீமைகளை

உடனடியாகத் தடுப்பதற்கான வழிமுறைகளை மேற்கொள்ள வேண்டும் என்று தெளிவுபடுத்தினார்கள்.

அவர்கள் (அந்த வெளிநாட்டுப் படைகள்) அதற்காகவே வந்தார்கள். அவர்கள் நாடுகளை ஆக்கிரமிக்கவோ, அவற்றைக் கைப்பற்றவோ வரவில்லை; மாறாக, அத்துமீறலைத் தடுக்கவும், அநியாயத்தை நீக்க உதவவும் வந்தார்கள். பின்னர் அவர்கள் தங்கள் நாடுகளுக்கே திரும்பி விடுவார்கள். மேலும், எதிரி (ஸத்தாம் ஹுஸைன் கூட்டத்தினர்) உதவிபெறும் இடங்களை இப்போது அவர்கள் (ராணுவம்) ஆராய்கிறார்கள். அப்பாவி மக்களையும் பொதுமக்களையும் வேண்டுமென்றே அவர்கள் கொல்வதில்லை. மாறாக, அநியாயக்காரர்களையும், அத்துமீறுபவர்களையும் கொல்வதையும், அவர்களின் திட்டங்களை முறியடிப்பதையும், போரில் அவர்களின் ஆயுத வினியோக வழிகளையும் பலத்தையும் அழிப்பதையுமே அவர்கள் நாடுகிறார்கள்.

ஆனால், வதந்தி பரப்பும் தீய நோக்கமுடைய சிலர் மக்களிடம் பொய் சொல்கிறார்கள். "அவர்கள் இரு புனிதத் தலங்களையும்

(ஹரமைன்) முற்றுகையிட்டார்கள்" என்றும், "அவர்கள் இப்படிச் செய்தார்கள்", "அப்படி விட்டுவிட்டார்கள்" என்றும் கூறுகிறார்கள். இவை அனைத்தும் பொய்யைப் பரப்புவதற்கும், சில மக்களின் உள்ளங்களில் உள்ள காழ்ப்புணர்ச்சியின் காரணமாகவோ, அல்லது அவர்களில் சிலரின் அறியாமை மற்றும் தொலைநோக்குப் பார்வையின்மையின் காரணமாகவோ, அல்லது மக்களைக் குழப்புவதற்காக ஈராக் ஆட்சியாளரால் கூலிக்கு அமர்த்தப்பட்டதன் காரணமாகவோ மக்களிடம் குழப்பத்தை ஏற்படுத்துவதற்காகவுமே ஆகும்.

மக்கள் பல வகையினராக உள்ளனர்: உண்மைகளை அறியாமல், நடக்கும் நிகழ்வுகளில் குழப்பமடைந்தவர்களாகவும் உள்ளனர்; மார்க்கச் சட்டங்களை அறியாத பாமரர்களும் அவர்களில் உள்ளனர்; மேலும், மக்களிடம் குழப்பத்தை ஏற்படுத்துவதற்கும், சத்தியத்தை அவர்களுக்கு மறைப்பதற்கும் அக்கிரமக்கார, அநியாயக்காரர்களால் கூலிக்கு அமர்த்தப்பட்டவர்களும் அவர்களில் உள்ளனர். அல்லாஹ்வே உதவி தேடப்படுபவன்.

**[மஜ்மூஉல் ஃபதாவா – பகுதி: 6 பக்கம்: 147.]**

அல்குர்ஆன் வசனத்திற்கும், ஷேக் இப்னு பாஸ் (ரஹிமஹுல்லாஹ்) போன்ற மூத்த அறிஞர்களின் ஃபத்வாவிற்கும் இடையே எந்த முரண்பாடும் இல்லை என்பதை உஸூல் அல்–ஃபிக்ஹ் அடிப்படையில் நாம் விளங்கிக் கொள்ள முடியும்.

**காஃபிர்களை உற்ற நேசர்களாக (அவ்லியாக்களாக) ஆக்குவதைத் தடுத்தல் என்ற (5:51) திருமறை வசனம்**

**அல்லாஹ் ரப்புல் ஆலமீன் கூறுகிறான்:**

يَـٰٓأَيُّهَا ٱلَّذِينَ ءَامَنُوا۟ لَا تَتَّخِذُوا۟ ٱلْيَهُودَ وَٱلنَّصَـٰرَىٰٓ أَوْلِيَآءَ ۘ

*"ஈமான் கொண்டவர்களே! யூதர்களையும், கிறிஸ்தவர்களையும் அவ்லியாக்களாக (உற்ற நேசர்களாக, உதவியாளர்களாக) ஆக்கிக் கொள்ளாதீர்கள்..."* [**அல்–மாயிதா: 51**]

இந்த வசனம், அவர்களின் மார்க்கத்தை விரும்புவது, அவர்களின் மார்க்கத்திற்காக உதவி செய்வது மற்றும் அவர்களின் மார்க்கக் கொள்கைகளை ஏற்றுத் திருப்தியடைவது போன்ற **'முவாலாத்' (நேசம்)** தொடர்பான பொதுவான

சட்டமாகும். இது அன்றாட உலகியல் சார்ந்தகொடுக்கல் வாங்கல்கள், ஒரு தேவையொட்டி உதவி பெறுதல் அல்லது ஒரு குறிப்பிட்ட காலத்திற்கான தற்காலிக ஒப்பந்தங்கள் போன்ற அனைத்துச் சூழல்களுக்கும் பொருந்தாது.

**தடுக்கப்பட்ட 'அல்–வலா' (நேசம்) என்பது:** மார்க்க ரீதியான அன்பு பாராட்டுவது, அவர்களின் மார்க்கத்தைப் பரப்புவதற்கு உதவி செய்வது அல்லது இஸ்லாத்திற்கு எதிராக அவர்களோடு இணைந்து செயல்படுவது மட்டுமே ஆகும்.

**குர்ஆன் வசனத்தைத் தவறாகப் புரிந்துகொள்வதைத் தவிர்ப்போம்!**

"யூதர்களையும் கிறிஸ்தவர்களையும் நேசர்களாக ஆக்காதீர்கள்" என்ற அல்குர்ஆன் வசனத்தை (5:51) இன்று சிலர் தங்களுக்குச் சாதகமாகத் தவறாகப் பயன்படுத்தி வருகிறார்கள். மார்க்க அடிப்படைச் சட்டக் கலை (உஸூல் அல்–ஃபிக்ஹ்) வல்லுநர்களின் விளக்கப்படி, இந்த வசனத்தில் தடுக்கப்பட்டிருப்பது அவர்களின் மார்க்கக் கொள்கைகளை

நேசிப்பதையும், இஸ்லாத்திற்கு எதிராக அவர்களுக்கு உதவி செய்வதையும் மட்டுமே ஆகும்.

உதாரணமாக, பசியால் வாடும் ஒருவன் ஒரு யூதரிடம் உணவு வாங்குவதோ அல்லது ஒரு நாடு தனது பாதுகாப்பிற்காக ஒரு கிறிஸ்தவ நாட்டிடம் தொழில்நுட்ப உதவிகளையோ, ராணுவ ஒப்பந்தங்களையோ பெறுவது இந்தத் தடையின் கீழ் வராது. இது ஒரு தற்காலிகத் தேவைக்காகச் செய்யப்படும் உலகாயத ஒப்பந்தமாகும். நபிகள் நாயகம் ﷺ அவர்களே ஒரு முஷ்ரிக்கின் பாதுகாப்பில் மக்காவிற்குள் நுழைந்துள்ளார்கள்; ஒரு முஷ்ரிக்கினுடைய ஆயுதங்களை இரவலாகப் பெற்றுப் போருக்குச் சென்றுள்ளார்கள். எனவே, ஒரு தேவையொட்டி முஸ்லிமல்லாதவர்களிடம் உதவி பெறுவதற்கும், அவர்களின் மார்க்கத்தை ஏற்றுக்கொள்வதற்கும் இடையில் மிகப்பெரிய வித்தியாசம் உள்ளது.

இந்த நுணுக்கமான வேறுபாட்டைப் புரியாதவர்களே, முஸ்லிம் ஆட்சியாளர்கள் ஒப்பந்தங்கள் செய்யும்போது அவர்கள் காஃபிர்களுடன் கைகோர்த்துவிட்டதாக அபாண்டமான

அவதூறுகளைச் சுமத்துகிறார்கள். மார்க்கம் என்பது உணர்ச்சிகளால் அல்ல, உலமாக்கள் விளக்கித் தந்த தெளிவான அடிப்படை விதிகளின் (உஸூல்) மூலமே அணுகப்பட வேண்டும்.

ஷய்க் இப்னு பாஸ் அவர்களின் இது சம்பந்தமான இந்த ஃபத்வா பின்வரும் வலுவான ஃபிக்ஹ் விதிகளின் அடிப்படையில் கட்டப்பட்டுள்ளது:

- **நிர்ப்பந்தங்கள் தடுக்கப்பட்டவற்றை ஆகுமாக்கும்:**

الضرورات تبيح المحظورات

மார்க்கத்தில் அடிப்படையில் ஒரு விஷயம் தடுக்கப்பட்டிருந்தாலும் (உதாரணமாக, அரபு தீபகற்பத்தில் காஃபிர்களின் ராணுவத் தளம் அமைப்பது), லட்சக்கணக்கான முஸ்லிம்களின் உயிரும் மானமும் பறிபோகும் அபாயம் ஏற்படும் போது, அந்த 'நிர்ப்பந்தம்' தற்காலிகமாக அந்தத் தடையை விலக்குகிறது. பசியால் இறக்கும் தருவாயில் உள்ளவருக்குப் பன்றி இறைச்சி ஹலாலாவதைப் போல.

- **பெரும் தீங்கைத் தடுக்க, சிறிய தீங்கைத் தேர்ந்தெடுத்தல்**

# ارتكاب أخف الضررين لدفع أعظمهما

இது மிக முக்கியமான மார்க்க விதி. அறிஞர்களுக்கு முன் இரண்டு தீங்குகள் இருக்கும்.

1. சத்தாம் உசேன் மற்றும் அவனது பாத்திச (Ba'athist) படைகள் ஒட்டுமொத்த வளைகுடா நாடுகளையும் ஆக்கிரமித்து, முஸ்லிம்களின் ரத்தத்தை ஒட்டுவது (மிகப்பெரிய தீங்கு).

2. உதவிக்காக அமெரிக்கப் படைகளை உள்ளே அனுமதிப்பது (சிறிய தீங்கு).

   உஸூல் விதியின்படி, மிகப்பெரிய தீங்கைத் தடுப்பதற்காக, அதைவிடச் சிறிய தீங்கைச் சகித்துக்கொள்வது மார்க்கக் கடமையாகும்.

- **(தஹ்கீக் அல்–மனாத் – تحقيق المناط – நிலவரத்தை உறுதி செய்தல்):**

  ஒரு வசனத்தையோ ஹதீஸையோ ஒரு நிகழ்வுக்குப் பொருத்துவதற்கு முன், அந்த நிகழ்வின் யதார்த்தத்தை

அறிஞர்கள் ஆராய்வார்கள். அஷ்ஷய்க் இப்னு பாஸ் (ரஹிமஹுல்லாஹ்) அவர்கள் கல நிலவரத்தை ஆராய்ந்தபோது, இது இஸ்லாத்திற்கு எதிரான போர் அல்ல, மாறாக ஒரு அக்கிரமக்கார முஸ்லிம் ஆட்சியாளனின் (சத்தாம்) ஆக்கிரமிப்பிலிருந்து அப்பாவி முஸ்லிம்களைக் காக்கும் தற்காப்பு நடவடிக்கை என்பதை உறுதி செய்தார்கள்.

**ஸுன்னாவில் இதற்கான ஆதாரங்கள்**

உஸூல் அறிஞர்கள் இந்த விதிகளுக்கு நபிகள் நாயகம் ﷺ அவர்களின் வாழ்விலிருந்தே ஆதாரங்களை முன்வைக்கிறார்கள்:

- நபி ﷺ அவர்கள் தாயிஃப் பயணத்திலிருந்து திரும்பியபோது, மக்காவில் நுழைவதற்காக முத்இம் பின் அதீ என்ற **முஷ்ரிக்கின் (இணைவைப்பவரின்) பாதுகாப்பைக் கோரினார்கள்.** ஸஹீஹ் புகாரி (3139) ஸஹீஹ் முஸ்லிம் (2689). பார்க்க: இப்னுல் கய்யிம் (ரஹிமஹுல்லாஹ்) அவர்களின் "ஸாதுல் மஆத்" (3/30).

- ஹுனைன் போரின்போது, இஸ்லாமியப் படைக்கு ஆயுதங்கள் தேவைப்பட்டதால், நபிகள் நாயகம் ﷺ அவர்கள் ஸஃப்வான் பின் உமையா என்ற **முஷ்ரிக்கிடம் ஆயுதங்களை இரவலாக (உதவியாக) பெற்றார்கள்.** (சுனன் அபூதாவூத் 3564).

ஆகவே, காஃபிர்களிடம் மார்க்க ரீதியான நேசம் வைப்பது ஹராம்; ஆனால் முஸ்லிம்களின் நலனுக்காகவும் பாதுகாப்பிற்காகவும் அவர்களிடம் உலக ரீதியான ராணுவ உதவி பெறுவது (இஸ்திஆனா) மார்க்கத்தில் தேவைக்கு ஆகுமானது என்பதை முஸ்லிம்கள் புரிந்துக் கொள்ள வேண்டும்!

அறிஞர்கள் கூறியது போலவே அமெரிக்கப் படைகள் வந்ததால் அவர்கள் அந்த நாடுகளை ஆளத் தொடங்கிவிட்டார்களா? இல்லையே! அமெரிக்க ராணுவத் தளங்களுக்கான அனுமதி என்பது, வெறுமனே அவர்களின் போர் கப்பல்களையும், விமானங்களையும் நிறுத்தி வைப்பதற்கும், தற்காப்பு வியூகங்களை அமைப்பதற்குமான அனுமதியே தவிர, நாட்டை அவர்களிடம் தூக்கிக் கொடுத்துவிட்டார்கள் என்பதல்ல. இன்றும்

அந்த நாடுகள் தவ்ஹீதை பற்றி பிடித்துள்ள இஸ்லாமிய ஆட்சியாளர்களின் கட்டுப்பாட்டில்தான் நிம்மதியாக இயங்கி வருகின்றன.

அன்றைய சூழ்நிலையின் யதார்த்தத்தையும், மாபெரும் அறிஞர்களின் ஃபத்வாக்களையும் மூடிமறைத்துவிட்டு, முஸ்லிம் ஆட்சியாளர்கள் மீது அநியாயமாக அவதூறு கூறுபவர்கள், அல்லாஹ்வை அஞ்சிக் கொள்ள வேண்டும். பொறுப்பற்ற முறையில் அவதூறுகளைப் பரப்புவது குறித்து மார்க்கம் கடுமையாக எச்சரிக்கிறது.

*"எதைப் பற்றி உமக்கு (உறுதியான) அறிவு இல்லையோ, அதை நீர் பின்பற்ற வேண்டாம். நிச்சயமாக செவிப்புலனும், பார்வையும், இருதயமும் ஆகிய இவை ஒவ்வொன்றுமே (மறுமையில்) விசாரிக்கப்படக்கூடியவையாகும்."* (அல்குர்ஆன் 17:36).

## நன்றி கெட்ட விமர்சனங்கள்

ரப்பானிய்யான உலமாக்களும், பெரும்பாலான முஸ்லிம்களும் தங்கள் ஆட்சியாளர்களின் கீழ் அமைதியாக மார்க்கத்தைப்

பேணி வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். போர்ப் பதற்றம் நிலவும் இந்த நெருக்கடியான சூழலில், ஒவ்வொரு முஸ்லிமின் உயிரையும் பாதுகாப்பதற்காக முஸ்லிம் நாடுகள் எவ்வளவோ முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்து வருகின்றன.

மக்களின் பாதுகாப்பிற்கு முதலிடம் கொடுத்து, கடந்த இரண்டு நாட்களாக ஆட்சியாளர்களும் அதிகாரிகளும் பாடுபடுகின்றனர். பள்ளிவாசல்களில் நடைபெறும் தராவிஹ் தொழுகையைக் கூட நிறுத்திவிட்டு, மக்களை வீடுகளிலேயே பாதுகாப்பாகத் தொழுமாறு அறிவுறுத்தும் அளவிற்குப் பாதுகாப்பு அச்சுறுத்தல்கள் நிலவுகின்றன.

இவ்வளவு நெருக்கடியான சூழ்நிலையிலும், தங்கள் நாட்டு மக்களைக் காக்கப் போராடும் ஆட்சியாளர்களைப் பார்த்து, "அவர்கள் கால்களை நக்குகிறார்கள்" என்று அசிங்கமாகப் பேசுவது என்ன நியாயம்? இதற்குப் பெயர்தான் வீரமா? இதற்குப் பெயர்தான் சத்தியத்தை உரைப்பதா?

அரபு மக்கள் மட்டுமின்றி, இந்தியர்கள் உட்படப் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த நமது தாய்மார்கள், தந்தைமார்கள்,

சகோதரர்கள் என லட்சக்கணக்கான முஸ்லிம்கள் அங்கு வேலை செய்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள் அனைவரின் பாதுகாப்பிலும் எந்தச் சமரசமும் இன்றி அந்த ஆட்சியாளர்கள் அரணாக நின்று காத்து வருகிறார்கள். அங்கு வாழக்கூடிய சாமானிய மக்களைப் போய் கேட்டுப் பாருங்கள், ஆட்சியாளர்கள் தங்களுக்கு என்னென்ன நன்மைகளைச் செய்து கொண்டிருக்கிறார்கள் என்று அவர்கள் சாட்சி சொல்வார்கள். இத்தகைய கீழ்த்தரமான பேச்சுகளை, அங்கு வாழும் முஸ்லிம்கள் கூட ஒருபோதும் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள்.

இன்று நமது மிகப்பெரிய வேதனை என்னவென்றால், யூடியூப் போன்ற தளங்களில் தோன்றும் இந்தப்போலி ஆலிம்களின் உணர்ச்சிகரமான பேச்சுகளைக் கேட்டு, உண்மையான மார்க்க நிலைப்பாடு என்னவென்று புரியாமல் அப்பாவிப் பொதுமக்கள் வழிகெடுக்கப்படுகிறார்கள் என்பதுதான். சத்தியத்தையும், ஸலஃபுகளின் கொள்கையையும் படித்து விளங்கிய உலமாக்களைப் பின்பற்றுவதே இந்த ஃபித்னாவிலிருந்து மக்களைப் பாதுகாக்கும்.

## அகீதாவின் முக்கியத்துவமும், ஆயுதம் ஏந்தாத கிளர்ச்சியாளர்களும்

இப்போது மரணித்த இந்த மனிதரை (கமேனியை) எந்த அடிப்படையில் இவர்கள் நல்லவர் என்று சொல்கிறார்கள்? எந்த அஹ்லுஸ் ஸுன்னா உலமாக்களில் யாரும் இவரை நல்லவர் என்று ஒருபோதும் சொல்லவில்லை. முதலில் அகீதா (கொள்கை) என்ன என்பதைத் தெரிந்துகொள்ளுங்கள்.

ஆயுதம் ஏந்தி கிளர்ச்சி செய்பவர்களை விட, மக்களிடையே கிளர்ச்சி எண்ணங்களை (தஹ்யீஜ்) ஊட்டுபவர்கள் மிகவும் மோசமானவர்கள் என்பதை அஹ்லுஸ் ஸுன்னாவின் உலமாக்கள் தெளிவாக விளக்கியுள்ளார்கள். இவர்களைத் தான் மார்க்க அறிஞர்கள் 'அல்–கவாரிஜ் அல்–கஃதிய்யா' (உட்கார்ந்து கொண்டே கிளர்ச்சியைத் தூண்டுபவர்கள்) என்று எச்சரிக்கிறார்கள்.

## ராஃபிதாக்களின் வழிகெட்ட நம்பிக்கைகளும் போலி அரசியல் ஒற்றுமையும்

நாம் உலக முஸ்லிம்கள் அனைவருக்காகவும் துஆ செய்கிறோம். அதேபோன்று ஷியாக்களுக்கும் அல்லாஹ் நேர்வழி வழங்க வேண்டும் என்று துஆ செய்கிறோம். ஸஹாபாக்களை (ரதியல்லாஹு அன்ஹும்) காஃபிர்கள் என்று தீர்ப்பளிக்கும் (தக்ஃபீர் செய்யும்) மோசமான ராஃபிதா கொள்கையிலிருந்து அவர்கள் மீள வேண்டும். அல்லாஹ்வை விட்டுவிட்டு அலி (ரதியல்லாஹு அன்ஹு), ஹுஸைன் (ரதியல்லாஹு அன்ஹு) ஆகியோரை வணங்கிக் கொண்டிருக்கும் அந்த இணைவைப்பிலிருந்து அவர்கள் விடுபட வேண்டும். ஒருவன் உண்மையான ஒற்றுமையை விரும்பினால், நேர்வழியை நோக்கி நகர வேண்டும்.

ஆனால் இன்றைய சமூகத்தின் அவலம் என்னவென்றால், அகீதாவை முற்றிலும் மறந்துவிட்டு, வெறும் அரசியலுக்காக இவர்களோடு ஒற்றுமையைத் தேடிக் கொண்டிருக்கிறார்கள்.

ஸஹாபாக்கள் விஷயத்தில், குறிப்பாக அன்னை ஆயிஷா (ரதியல்லாஹு அன்ஹா) அவர்களின் விஷயத்தில் இந்த ராஃபிதாக்கள் என்ன மோசமான நிலைப்பாடு எடுத்திருக்கிறார்கள் என்பதை ஏன் இவர்கள் சிந்திப்பதில்லை?

அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்கள் கூறினார்கள்:

**لا تَسُبُّوا أَصْحَابِي، فَلَوْ أَنَّ أَحَدَكُمْ أَنْفَقَ مِثْلَ أُحُدٍ ذَهَبًا، مَا بَلَغَ مُدَّ أَحَدِهِمْ، وَلَا نَصِيفَهُ**

*"என் தோழர்களைத் திட்டாதீர்கள். என் உயிர் எவன் கைவசம் இருக்கிறதோ அவன் மீது சத்தியமாக! உங்களில் ஒருவர் உஹுத் மலை அளவு தங்கத்தைத் தர்மம் செய்தாலும், அவர்கள் செய்த ஒரு கையளவு அல்லது அதில் பாதியளவு தர்மத்திற்கு அது ஈடாகாது."* **(நூல்: புகாரி 3673, முஸ்லிம் 2540).**

## வரலாற்றில் ஈரானின் அத்துமீறல்களும் அப்பாவி முஸ்லிம்களின் மரணமும்

சிரியா, லெபனான் மற்றும் ஈராக் ஆகிய நாடுகளில் எண்ணற்ற முஸ்லிம்கள் கொன்று குவிக்கப்பட்டார்களே, அதற்கெல்லாம் யார் காரணம்? சவுதி அரேபியாவா அல்லது மற்ற அரபு நாடுகளா? இந்த ஈரான் என்ற நாடு மட்டும்தானே இவர்களுக்கு ஆயுதங்களைக் கொடுத்து அப்பாவி முஸ்லிம்களைக் கொன்று குவித்தது!

இன்றுவரை அந்தந்த நாட்டு மக்களிடம் சென்று கேட்டுப் பாருங்கள். தங்களின் நாடுகளை யார் ஆக்கிரமித்தார்கள், யார் தங்களுக்குப் பிரச்சனை செய்தார்கள் என்பதை அவர்கள் தெளிவாகச் சொல்வார்கள். ஒருபுறம் அமெரிக்கர்கள் செய்த கொடுமை என்றால், மறுபுறம் இவர்களின் (ராஃபிதாக்களின்) கொடுமை சாதாரணமானதல்ல. எல்லாவற்றையும் நடுநிலையோடு சிந்தித்துப் பாருங்கள். உணர்ச்சிகளைத் தவிர்த்துவிட்டு, மார்க்க உலமாக்கள் இதை எவ்வாறு அணுகுகிறார்கள் என்பதைப் பாருங்கள்.

## ஆட்சியாளர்களை அவமதிப்பது வீரம் அல்ல, அது கவாரிஜ் சிந்தனை

நமது இப்போது ரமதானில் தொடர் வகுப்பில்கூட பயின்றுவரும் 1200 வருடத்திற்கு முன்னால் அல்–இமாம் அல்–பர்பஹாரீ அவர்கள் எழுதிய “ஷர்ஹுஸ் ஸுன்னா” பாடத்தில் கூட இந்த விஷயம் பின்னி பிணைந்துள்ளது . ஆட்சியாளர்களைப் பற்றிப் பொதுவெளியில் பேசுவது மார்க்க அடிப்படையில் முற்றிலும் தடுக்கப்பட்டதாகும். ஆனால் இன்று யூடியூபில் தாடி வைத்துக்கொண்டு, தொப்பி போட்டுக்கொண்டு, மார்க்கத் தோற்றத்தில் வருபவர்கள், ஆட்சியாளர்களைப் பார்த்தும் அறிஞர்களைப் பார்த்தும் "ஷூ நக்கி", "கால்களை நக்குகிறார்கள்" என்றெல்லாம் சர்வசாதாரணமாகக் கேவலமாகப் பேசிக் கொண்டிருக்கிறார்கள். மறுபடியும் அவர்களுக்கு

நபிகளாரின் இந்த பொன்மொழியை நினைவூட்டுகிறேன்:

لَيْسَ الْمُؤْمِنُ بِالطَّعَّانِ، وَلَا اللَّعَّانِ، وَلَا الْفَاحِشِ، وَلَا الْبَذِيءِ

*"முஃமின் (இறைநம்பிக்கையாளன்) என்பவன் குறை கூறுபவனாகவோ, சபிப்பவனாகவோ, கெட்ட வார்த்தைகள் பேசுபவனாகவோ, வரம்பு மீறுபவனாகவோ இருக்க மாட்டான்."* **(நூல்: திர்மிதி 1977).**

அல்லாஹ்வின் அடியார்களே! இதற்குப் பெயர் வீரம் அல்ல. மார்க்கம் கற்றுத்தந்த வீரம் இதுவல்ல. இதற்குப் பெயர் இக்வானிஸம்! இதற்குப் பெயர்தான் கவாரிஜ் சிந்தனை! அப்பாவி மக்களை ஆட்சியாளர்களுக்கு எதிராகக் கிளர்ச்சியின் பக்கம் தூண்டும் இந்தச் செயலை இஸ்லாம் வன்மையாகக் கண்டிக்கிறது. நாம் இதை வெறுத்தாலும் சரி, ஏற்றுக்கொண்டாலும் சரி, இதுதான் சத்தியம்.

அல்லாஹ் தன் திருமறையில் கூறுகிறான்:

يَٰٓأَيُّهَا ٱلَّذِينَ ءَامَنُوٓاْ أَطِيعُواْ ٱللَّهَ وَأَطِيعُواْ ٱلرَّسُولَ وَأُوْلِى ٱلْأَمْرِ مِنكُمْ ۖ فَإِن تَنَٰزَعْتُمْ فِى شَىْءٍ فَرُدُّوهُ إِلَى ٱللَّهِ وَٱلرَّسُولِ إِن كُنتُمْ تُؤْمِنُونَ بِٱللَّهِ وَٱلْيَوْمِ ٱلْـَٔاخِرِ ۚ ذَٰلِكَ خَيْرٌ وَأَحْسَنُ تَأْوِيلًا

*"முஃமின்களே! நீங்கள் அல்லாஹ்வுக்குக் கீழ்ப்படியுங்கள், (அவனது) தூதருக்கும் கீழ்ப்படியுங்கள், இன்னும் உங்களில் அதிகாரம் உடைய (ஆட்சியாளர்களுக்கு) கீழ்ப்படியுங்கள், ஆனால் யாதொரு விஷயத்தில் நீங்கள் முரண்பட்டுக்கொண்டால், அதனை அல்லாஹ்விடமும் அவனது தூதரிடமும் திருப்பி ஒப்படைத்து விடுங்கள், (அவர்களுடைய தீர்ப்பை நீங்கள் திருப்தியாகவே ஏற்றுக் கொள்ளுங்கள்) மெய்யாகவே நீங்கள், அல்லாஹ்வையும் இறுதி நாளையும் விசுவாசங்கொண்டவர்களாக இருந்தால், இதுதான்*

*நன்மையாகவும் மிக அழகான முடிவாகவும் இருக்கும்."*

(அல்குர்ஆன் 4:59).

**முடிவுரை: மூத்த அறிஞரின் வழிகாட்டுதல்**

இறுதியாக, அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலா நம் அனைவருக்கும் நேர்வழியை வழங்குவானாக. உலமாக்களாலும் அறிஞர்களாலும் நம் நூற்றாண்டின் 'ஷைகுல் இஸ்லாம்' என்று போற்றப்படும் மூத்த அறிஞர், அல்–இமாம் அப்துல் அஸீஸ் இப்னு பாஸ் (ரஹிமஹுல்லாஹ்) அவர்கள் வழங்கிய பொன்னான மார்க்க ஃபத்வாவை இங்கே நிறைவாகப் பதிவு செய்து, எனது இந்தக் கட்டுரையை முடித்துக் கொள்கிறேன். அல்லாஹ் அவர்களுக்கு ரஹ்மத் செய்வானாக! அவர்கள் எவ்வளவு அழகாக, மிகத் தெளிவான ஒரு ஃபத்வாவை வழங்கிச் சென்றிருக்கிறார்கள்; அது இன்றுவரை இந்தச் சமூகத்திற்கு எவ்வளவு பெரிய வழிகாட்டியாகத் திகழ்கிறது என்பதை நாம் ஆழமாகச் சிந்தித்துச் செயல்பட வேண்டும். அல்லாஹ்வே நமக்குப் போதுமானவன்!

**கேள்வி:** ராஃபிதாக்களின் வரலாற்றை நீங்கள் அறிந்திருப்பதன் அடிப்படையில், அஹ்லுஸ் ஸுன்னாக்களுக்கும் அவர்களுக்கும் இடையே நெருக்கத்தை ஏற்படுத்தும் கொள்கை குறித்த தங்களின் நிலைப்பாடு என்ன?

**பதில்:** (ஷியா) ராஃபிதாக்களுக்கும் அஹ்லுஸ் ஸுன்னாவிற்கும் இடையே நெருக்கத்தை ஏற்படுத்துவது சாத்தியமற்றது; ஏனெனில் அகீதா (கொள்கை) வெவ்வேறானதாகும். அஹ்லுஸ் ஸுன்னா வல் ஜமாஅத்தின் அகீதா என்பது, அல்லாஹ்வை ஏகத்துவப்படுத்துவதும், வணக்கவழிபாடுகளை அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலாவிற்கு மட்டுமே தூய்மையாக்குவதும் ஆகும். மேலும், அவனுடன் வேறு யாரையும் அழைக்கக்கூடாது – அவர் நெருக்கமான வானவராக இருந்தாலும் சரி, அனுப்பப்பட்ட நபியாக இருந்தாலும் சரி. மறைவானவற்றை அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலா மட்டுமே அறிவான் என்பதும் ஆகும். மேலும், அனைத்து ஸஹாபாக்களையும் நேசிப்பதும், அவர்கள் மீது திருப்தி கொள்வதும் (ரதியல்லாஹு அன்ஹும்), நபிமார்களுக்குப் பிறகு அல்லாஹ்வின் படைப்புகளில் அவர்களே

Islam Tamil இஸ்லாம் தமிழ்

மிகச் சிறந்தவர்கள் என்று ஈமான் கொள்வதும் அஹ்லுஸ் ஸுன்னாவின் அகீதாவில் ஒன்றாகும். மேலும், அவர்களில் மிகச் சிறந்தவர் அபூபக்கர் அஸ்—ஸித்தீக், பின்னர் உமர், பின்னர் உஸ்மான், பின்னர் அலி (ரதியல்லாஹு அன்ஹும்) ஆவார்கள். ஆனால், ராஃபிதாக்கள் இதற்கு மாற்றமானவர்கள். எனவே, அவர்கள் இருவரையும் ஒன்றுசேர்ப்பது சாத்தியமில்லை. எவ்வாறு யூதர்கள், கிறிஸ்தவர்கள், இணைவைப்பவர்கள் மற்றும் அஹ்லுஸ் ஸுன்னாவை ஒன்றுசேர்ப்பது சாத்தியமில்லையோ, அதேபோன்று நாம் விளக்கியுள்ள இந்த அகீதா வேறுபாட்டின் காரணமாக ராஃபிதாக்களுக்கும் அஹ்லுஸ் ஸுன்னாவுக்கும் இடையே நெருக்கத்தை ஏற்படுத்துவதும் சாத்தியமற்றது.

**[மஜ்மூஉல் ஃபதாவா – பகுதி: 5 பக்கம்: 56.]**

**யா ரப்! சத்தியத்தின் பக்கம் எங்களை உறுதியாக நிலைநிறுத்துவாயாக. பிரச்சனைகள் வரும்போது உணர்ச்சிகளுக்கு அடிமைப்படாமல், உன்னுடைய மார்க்கத்தின் அடிப்படையிலும், ரப்பானிய்யான உலமாக்களின்**

வழிகாட்டுதலிலும் அவற்றை அணுகும் நேர்வழியை எங்களுக்குத் தந்தருள்வாயாக.

யா அல்லாஹ்! உலக முஸ்லிம்கள் அனைவரையும் உண்மையான ஏகத்துவம் மற்றும் அஹ்லுஸ் ஸுன்னா வல் ஜமாஅத்தின் மாசற்ற கொள்கையின் கீழ் ஒன்றுதிரட்டுவாயாக. வழிகெட்ட சிந்தனைகளிலிருந்தும், பிரிவினைகளிலிருந்தும் எங்கள் சமுதாயத்தைப் பாதுகாப்பாயாக.

யா அல்லாஹ்! இஸ்லாமிய சமூகத்தையும், இஸ்லாமிய நாடுகளையும், நமது ஆட்சியாளர்களையும் நேர்வழியில் செலுத்திடுவாயாக. எங்கள் நாவுகளைப் பேணிக்காத்து, உனக்குப் பொருத்தமான நேர்வழியில் இறுதிவரை வாழும் பாக்கியத்தை எங்கள் அனைவருக்கும் தந்தருள்வாயாக. ஆமீன்!

www.islamtamil.com

ஆக்கம்– அஸ்லம் பின் ஹாஷிம்